# நவம்பர் – 14 – புதன்

**புனித ரோச்**

**“ஆண்டவரேஎன் ஆயர் எனக்கேதும் குறையில்லை”**

**–திபா 23:1**

## முதல் வாசகம் : தீத்து 3 : 1 – 7

அன்பிற்குரியவரே! நீ அவர்களுக்கு நினைவூட்ட வேண்டியவை : தலைவர்களுக்கும்இ அதிகாரிகளுக்கும் அவர்கள் பணிந்து கீழ்ப்படிய வேண்டும் அனைத்து நற்செயல்களையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். எவரையும் பழித்துரைக்கலாகாது. சண்டையிடலாகா. கனிந்த உள்ளத்தினராய் மக்கள் அனைவரோடும் நிறைந்த பணிவுடன் பழகவேண்டும். ஏனெனில் நாமும் ஒருகாலத்தில் அறியாமையில் இருந்தோம். கீழ்ப்படியாமல் இருந்தோம். நெறிதவறிச் சென்றோம். தீய நாட்டங்களுக்கும்இ பல்வகைச் சிற்றின்பங்களுக்கும் அடிமைகளாய் இருந்தோம். தீமையிலும்இ பொறாமையிலும் உழன்றோம் காழ்ப்புணர்ச்சி கொண்டவராய் ஒருவர் மற்றவரை வெறுத்தோம். நம் மீட்பராம் கடவுளின் நன்மையும்இ மனித நேயமும் வெளிப்பட்டபோது, நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல, மாறாகத் தம் இரக்கத்தை முன்னிட்டு, புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும்இ புதுப்பிக்கும் தூய ஆவியாலும் கடவுள் நம்மை மீட்டார். அவர் நம் மீட்பராகிய இயேசுக் கிறிஸ்துவின் வழியாகத் தூய ஆவியை நம்மீது நிறைவாகப் பொழிந்தார். நாம் அவரது அருளால் அவருக்கு ஏற்புடையவர்களாகி, நாம் எதிர்நோக்கி இருக்கும் நிலைவாழ்வை உரிமைப்பேறாகப் பெறும்பொருட்டே இவ்வாறு செய்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் என் ஆயர் எனக்கேதும் குறையில்லை

## நற்செய்தி : லூக்கா 17 : 11 - 19

அக்காலத்தில் இயேசு எருசலேமுக்குப் போய்க் கொண்டிருந்தபோது கலிலேய, சமாரியப் பகுதிகள் வழியாகச் சென்றார். ஓர் ஊருக்குள் வந்தபொழுது, பத்து தொழுநோயாளர்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்து, தூரத்தில் நின்று கொண்டே,”ஐயா! இயேசுவே, எங்களுக்கு இரங்கும்” என்று உரக்கக் குரலெழுப்பி வேண்டினார்கள்.அவர் அவர்களைப் பார்த்து, ”நீங்கள் போய் உங்களைக் குருக்களிடம் காண்பியுங்கள்” என்றார். அவ்வாறே அவர்கள் புறப்பட்டுப் போகும்போது அவர்கள் நோய் நீங்கிற்று.அவர்களுள் ஒருவர் தம் பிணி தீர்ந்திருப்பதைக் கண்டு உரத்த குரலில் கடவுளைப் போற்றிப் புகழ்ந்துகொண்டே இயேசுவிடம் திரும்பி வந்தார். அவருடைய காலில் முகங்குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார். அவரோ ஒரு சமாரியர்.இயேசு, அவரைப் பார்த்து, ”பத்துப் பேர்களின் நோயும் நீங்கவில்லையா? மற்ற ஒன்பது பேர் எங்கே? கடவுளைப் போற்றிப் புகழ அன்னியராகிய உம்மைத் தவிர வேறு எவரும் திரும்பிவரக் காணோமே!” என்றார். பின்பு அவரிடம், ”எழுந்து செல்லும், உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது” என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் தமது அற்புத குணமாக்குதலுக்காக நன்றி சொல்ல தனி ஒருவராகத் திரும்பிவரும் சமாரியனான தொழுநோயாளியிடம் “பத்துப் பேர்களின் நோயும் நீங்கவில்லையா? மற்ற ஒன்பது பேர் எங்கே” என்று வினாவுகின்ற தெய்வீக இயல்பு கொண்ட ஆண்டவர் இயேசுவைச் சந்திக்கின்றோம். நற்செய்தியை ஆழமாகப் படிக்கும்போது தனியனாக மீண்டும் திரும்பி வந்த சமாரியரிடம் “உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது” என்று வேறுவிதமாக, ஆசீர்வதிப்பதனையும் அவதானிக்கலாம். இறைமகன் இயேசு “நீங்கள் போய் உங்களைக் குருக்களிடம் கான்பியுங்கள்” என அக்காலத்தைய யூதமதத்திற்கமைவான நோய் நீங்கியதற்காக மோசேயின் கட்டளையை நினைவுபடுத்தினாலும், தொழு நோயாளிகளை மட்டுமல்ல அனைத்து நோயாளிகளையும் தொடர்ந்தும் “செபிக்க” அழைக்கும் மறைபொருள் இருப்பதனையும் நன்குணரலாம். இதனால், ஆண்டவர் இயேசுவிடம் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள், வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுவதோடு மாத்திரம் நாம் நின்றுவிடாது, அனுதினமும் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடிக்கொண்டே இருப்போமாயின், எம்மை இன்னமும் பல்வேறு ஆசீர்வாதங்களால் நிரப்புவார் என ஆண்டவர் இயேசு வேறுவிதமாகவும் இன்றைய நற்செய்திவழியாகப் போதிக்கின்றார் எனவும் அர்த்தம் கொள்ளலாம். நாம் இரந்து மனதுருகி செபிக்கும் போது ஆண்டவர் இயேசு கனிவோடு செவிசாய்க்கின்றார். இதற்கு நாயளவு தன்னைத் தாழ்த்திய கனானேயப் பெண் இதனது ஊழியனுக்காக செபித்த நூற்றுவர் தலைவன், தனது மகளுக்காக செபித்த ஜாயீர், பாவியானவரி தண்டுபவர், வலதுபுறக் கள்வன் போன்ற பல உதாரணங்களை காணலாம். எனவே, இன்றே ஒரு புதிய தீர்மானம் எடுத்து. அனுதினமும ் தவறாது செபிப்பதும் மட்டுமல்ல, எமது மிகச்சிறியகாரியங்கள் ஊடாக எமது குடும்பங்களில் இவேலைத்தளங்களில், சமூகத்தில் செபத்தின் வல்லமையை அறிவிக்கும் பணியாளர்களாக மாற்றமடைவோம். சிறுதுளி பெருவெள்ளமாகமாற்றமடைய இறை அருள் வேண்டிச் செபிப்போம். அதுவே ஆண்டவர் இயேசு எமக்குச் செய்த நன்மைகளுக்கான நன்றியாக மாற்றமடையட்டும்.